R4876

INTERESTING QUESTIONS

ஆவலைத் தூண்டும் கேள்விகள்

காளையின் இரத்தத்தின் முக்கியத்தும்

கேள்வி: காளையின் இரத்தம் எதைக் குறிக்கிறது?

பதில் : மகா பரிசுத்த ஸ்தலத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இரத்தம் பலி கொடுத்தவர்களின் ஜீவனை அல்லது ஜீவிய உரிமைகளை குறிக்கிறது. ஆனால் இரத்தமே மரணத்தின் அடையாளமாக இருந்தது. இரத்தம் இரத்த நாளத்தில் இருக்கும் போது அது ஜீவனை அடையாளப்படுத்துகிறது. ஆசாரியனின் கைகளில் இருந்த காளையின் இரத்தம் பின்னர் ஆட்டுக்காடாவின் இரத்தம் அடையாளமாக குறிப்பது என்னவென்றால், மிருகம் இறந்துவிட்டது, அதற்கான ரூபகாரம் இங்கே இருக்கிறது. ஆகையால் இரத்தத்தை சமர்ப்பித்தல் என்பது பலியிடப்பட்ட ஜீவனை அதனைத் தொடர்புடைய சகல உரிமைகளையும் அர்த்தப்படுத்துகிறது.

நமது கர்த்தர் மரிக்கும் போது சில ஜீவிய உரிமைகளைக் பெற்றிருந்தார். ஜீவிய உரிமைகள் என்ற சொற்றொடர், முழு பொருளில் ஜீவனை பெற்றிராமல் முழு அர்ப்பணம் செய்த கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தனிப்பட்ட நபருக்கு சரியானபடி பயன்படுத்தலாம். இப்படிப்பட்டவர்கள் மரணத்தைக் கடந்து ஜீவனுக்குள் சென்றவர்கள் என்று கருதப்படுகிறார்கள். நீதிமானாகுதல் சாட்டப்படுகிற அந்த கணத்தில் அவன் மரணத்திலிருந்து ஜீவனுக்குள் பிரவேசிக்கிறான். பரிகாரியானவர் தமது நிறைவிலிருந்து அவனது குறைவை சரிகட்ட தமது புண்ணியத்தை சாட்டுதல் பண்ணியிருக்கிறார். இப்படியாக அவன் ஏற்புடையவராக ஆக்கப்பட்டு முழுமையான நிலைமையில் இருப்பதாக கருதப்படுகிறான். பிறகு அவன் ஜீவிய உரிமைகளைப் பெற்றிருக்கிறான். அந்த ஜீவிய உரிமைகள் தேவனிடம் அர்ப்பணித்ததாக அல்லது பலியிடப்பட்டதாக சொல்லப்படுகிறது. இந்த முறையில் அந்த நபர் மகா பிரதான ஆசாரியரின் ஒரு சரீர அங்கமாக ஆகிறான் என்று சொல்லப்படலாம். கிறிஸ்து அவனுடைய குறைவை சரிகட்ட தம்முடைய புண்ணியத்தை அவனுக்கு சாட்டுதல் பண்ணுகிறார். இந்த சாட்டுதல் மூலம் பிதாவானவருக்கு பிரியமுள்ளவராக ஆக்கப்பட்டு மகா பிரதான ஆசாரியரின் சரீர அங்கமாகிறார்.

நமது பலியை கொடுப்பதற்கும் நம்மை சமர்ப்பித்தலுக்கும் வித்தியாசம் உண்டு. நாம் அல்ல, பிரதான ஆசாரியனே பலியிடுகிறார். பிரதான ஆசாரியர் ஒருவனை தமது சரீரத்தின் அங்கமாக ஏற்றுக்கொள்ளுவதற்கும் முன்பு அவனுக்கு ஜீவிய உரிமைகளை கொடுப்பதற்கு தமது புண்ணியத்தை சாட்டுதல் பண்ணுகிறார். பூரணனாக கருதப்படுவதினிமித்தமாக ஒருவன் ஜீவிய உரிமையை தம்மை பலியாக ஒப்புக்கொடுக்க அனுமதிக்கிற நிலைமையைப் பெறுகிறான்.

நமது கர்த்தர் மரிக்கும் போது ஜீவிய உரிமைகள் அனைத்தும் காளையின் இரத்தத்தால் அடையாளமாக குறிப்பிடப்படுகிறது. அந்த இரத்தத்தைக் கொண்டு மகா பரிசுத்த ஸ்தலத்தில் தெளித்தல் நடைபெற்றது.

பிரதான ஆசாரியனின் கையிலிருந்த கத்தி காளையை வெட்டி பலி கொடுப்பது ஒரு கண நேரம். அந்த கண நேரம், யோர்தானில் மனிதனாக மரித்து, ஒரு புது சிருஷ்டியாக எழுந்த அந்த கணத்தை குறிப்பிடுகிறது. "நித்திய ஆவியினாலே தம்மைத் தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்தார்." ஆனால் அவர் தம்மை புது சிருஷ்டியாக அர்ப்பணம் பண்ணாமல் மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாக அர்ப்பணம் பண்ணினார். அவர் அங்கே பலியாக கொடுத்தது தமது பழுதற்ற மனிதத்தன்மையை ஆகும். இதை அவர் குமாரத்துவ நித்திய ஆவியினாலும் தேவனிடம் உள்ள விசுவாசத்தினாலும் கொடுத்தார். இது தீர்க்கதரிசனத்தில் முன்னுரைக்கப்பட்ட சரியான தருணமாக இருந்தது. பிறகு அவர் ஆசாரியனாக அங்கீகரிக்கப்பட்டார். கிறிஸ்து பூமியில் இருந்திருந்தால், பூமியின் தளத்தில் இருந்திருந்தால், அவர் ஆரோனின் குடும்பத்தில் இராததினால், மாம்சத்தின்படி ஆசாரியராயிருக்க முடியாது. ஆகையால் அவர் சார்ந்திருந்த ஆசாரியத்துவ முறைமை ஆவிக்குரிய முறைமையாக இருந்தது. இதைக் குறித்து வேத வாக்கியம் கூறுகிறதாவது: "நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்." (சங்கீதம் 110:4) அவர் மாம்சத்தின்படி ஆசாரியரல்ல. ஆனால் புது சிருஷ்டியின்படி ஆசாரியராயிருக்கிறார்.

அவரது பலியின் செயலினால் பிரதான ஆசாரியன் என்ற அதிகாரம் வந்தது. பிரகாரத்திற்கு காளை கொண்டு வரப்பட்டது, பலியின் நோக்கங்களுக்காவே ஆகும். இயேசுவுக்கும் அப்படியே இருக்கிறது. அவர் யோர்தானுக்கு யோவானிடம் வரும் போது அவர் தம்மையே அர்ப்பணித்தார். இதை பிதா அங்கீகரித்தார். கர்த்தரின் சீஷர்கள் தங்களை சமர்ப்பித்தனர். ஆனால் பெந்தெகொஸ்தே நாள் வரை அவர்கள் பலிகளாகவோ அல்லது ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களாகவோ ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அந்த நாளில் அவர்கள் காத்திருக்கும் போது, தேவன் பலியை ஏற்றுக்கொண்டு, அந்த கணத்தில் அவர்களை ஆசாரியர்களாக்கினார்.

நீதியை சாட்டுல்

கேள்வி: கிறிஸ்து தமது நீதியை அவரது சரீர அங்கங்களுக்கு சாட்டுதல் பண்ணினரா?

பதில் : நமது கர்த்தர் தமது நீதியை சாட்டினார் என்று நாம் சொல்லும் போது, அவர் பிரதான ஆசாரியனாக தமது சொந்த நீதியை கொடுத்தார் என்று நினைக்கக்கூடாது. ஆனால் அவர் தமது மானிட பலியின் புண்ணியத்தை நமது சார்பாக சாட்டுதல் பண்ணுகிறார். அவர் மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாக தமது ஜீவனை கொடுத்த போது, அவர் எந்த அளவிலும் மரண தண்டனைக்குட்பட்டவராயிருக்கவில்லை. அந்த பலியில் ஒரு புண்ணியம் இருந்தது. அவர் அர்ப்பணித்த பூமிக்குரிய ஜீவிய உரிமைகள், அவரது கணக்கில், உலக மனுக்குலத்தை மறுசீரமைக்கும், மறுவாழ்வு அளிக்கும் உரிமையை அவருக்கு கொடுப்பதற்காக வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அந்த பலியின் புண்ணியம் உலகிற்கு கொடுக்கப்படுவதற்கு முன்பு, நமது அபூரணத்தை மூடுவதற்கு நமது நீதிமானாக்குதல் அடிப்படையாக ஆக்கப்படுகிறது. நமது மறுசீரமைத்தலுக்கு அது பயன்படுத்தப்பட்டிருக்கக்கூடும். ஆனால் இந்த யுகத்தில் அது தேவனுடைய திட்டமில்லை. ஆகையால் கிறிஸ்துவின் புண்ணியம் விசுவாசிகளுக்கும் அர்ப்பணம்

செய்தவர்களுக்கும் சாட்டப்படுகிறது. மேலும் அது அவர்களது ஓட்டத்தின் முடிவில் அவர்களது அபூரண மண்பாண்டத்தின் கறைகளையும் அறியாமல் செய்த மீறுதல்களையும் மூடுகிறது.

நீதியும் புண்ணியமும்

கேள்வி: நமது கர்த்தரின் நீதிக்கும் அவரது புண்ணியத்திற்கும் என்ன வேறுபாடு?

பதில் : நமது கர்த்தரின் நீதி என்பது, அவர் மனிதனாக, சோதனையில் இருந்த போது அவரது நீதியான செயல்கள், அவரது நன்னடத்தை மற்றும் அவரது பூரண குணலட்சணம் ஆகும். புண்ணியம் என்பது அவரது நற்கிரியையின், குணலட்சணத்தின் தெய்வீக மதிப்பீடு ஆகும். அவர் மனிதனாக இருந்தது முடிவுக்கு வந்ததிலிருந்து நமது கர்த்தர், நிச்சயமாக, மானிடனாக நீதியை பெற்றிருக்கவில்லை. அவருடைய அர்ப்பணத்திற்கு முன்பு அவருடையதாக இருந்ததும் அவரால் பராமரிக்கப்பட்டதுமான அவரது நீதி தெய்வீக பார்வையில் புண்ணியத்தை அமைத்தது. அது இப்பொழுது சபைக்கு சாட்டப்படுகிறது. சீக்கிரத்தில் முழு உலகத்தின் பாவங்களை அழிப்பதற்கு பயன்படுத்தப்படும். அது நிறைவான புண்ணியமாக இருக்கிறது. ஏனெனில் ஒரு மனிதன் மரண தண்டனை அளிக்கப்பட்டான். பின்னர் இன்னொரு மனிதன் ஜீவனுக்கு பாத்திரராக ஆனார். ஆகையால் இந்த புண்ணியம் ஜீவனை கொடுத்ததின் மதிப்பு மரணத்திற்கு பாத்திரமானதல்ல. அது அவரால் வழங்கப்படுவது தெய்வீக ஏற்பாட்டில் இருக்கிறது.

உண்மை பொருளில் பொருத்த வேண்டும்

கேள்வி: ஆரோனின் ஆசாரியத்துவ முறைமை ஆயிரம் வருட யுகத்தில் அப்பியாசப்படுத்தப்படும் என்று எந்த வேதவாக்கியமாவது காண்பிக்கிறதா?

பதில் : மல்கியா புத்தகத்தில் இப்படி போதிப்பதாக புரிந்து கொள்ளும்படியான ஒரு வேத வாக்கியம் இருக்கிறது. அது சொல்லுகிறதாவது: கர்த்தர் தமது ஆலயத்துக்கு வரும் போது, “அவர் உட்கார்ந்து அவர் வெள்ளியை புடமிட்டுச் சுத்திகரித்துக் கொண்டிருப்பார். அவர் லேவியின் புத்திரரை சுத்திகரித்து அவர்கள் நீதியான காணிக்கையை செலுத்தும்படிக்கு, அவர்களை பொன்னைப் போலவும் வெள்ளியைப் போலவும் புடமிடுவார்.” (மல்கியா 3:3)

சிலர் இந்த வேத வாக்கியத்தை சொல்லர்த்தமாக லேவியின் புத்திரருக்கு பயன்படுத்துகிறார்கள். ஆனால் நாம் அதை உண்மைப் பொருளில் சிந்திக்க வேண்டும். அதாவது சபையானது லேவியரின் முறைமையை அமைக்கிறது. இவர்கள் ஆவிக்குரிய லேவியர்கள். இவர்கள் தேவனுக்கு பிரியமான பலியை செலுத்தும்படி மெய்யான லேவியராகவும் ராஜரீக ஆசாரியத்துவத்துக்கும் சுத்திகரிப்பவர் அவர்களை தயார்படுத்துவார்.